தமிழ் வாழ்க

துணர் ௪௮. மலர் ௧.

11 MAR 1973
MADRAS
33

தமிழ்ப் பொழில்

சௌமிய — சித்திரை

(1969 — ஏப்ரல் — மே)

கரந்தைத் தமிழ்ச் சங்கம்.

தொண்டு தமிழ் முன்னேற்றம்

கரந்தைத் தமிழ்ச் சங்கம், தஞ்சை.

தமிழ்ப் பொழில்

பதிப்பாசிரியர் குழு.

1. திரு. செ. தனக்கோடி, பி. ஏ, பொழிற்றொண்டர்,
தலைவர், கரந்தைத் தமிழ்ச் சங்கம்.

2. திரு. கு. பாலகிருட்டினன், எம்.ஏ., எல்.டி., செயலாளர்.

3. திரு. நீ. கந்தசாமி பிள்ளை, பள்ளியகரம், தஞ்சாவூர்.

4. சித்தாந்த கலாநிதி ஔவை சு. துரைசாமி பிள்ளை.
பேராசிரியர், தியாகராயர் கல்லூரி, மதுரை

5. திரு வித்துவான். க. வெள்ளைவாரணனர்,
ஆராய்ச்சித்துறை, அண்ணமலைப் பல்கலைக் கழகம்.

6. திரு வித்துவான். தி அடிகளாசிரியர். பேராசிரியர்,
கரந்தைப் புலவர் கல்லூரி, தஞ்சை.

7. திரு. வித்துவான். ச. பாலசுந்தரம், பேராசிரியர், ,,

8. திரு. வித்துவான். சி. கோவிந்தராசன், பேராசிரியர், ,,

உள்ளுறை.

துணர் சஈ — மலர் க

		பக்கம்
1.	பொழிற்றொண்டர் குறிப்புக்கள்	1
2.	திராவிட மொழிகளின் ஒப்பிலக்கண வரலாறு திரு டாக்டர் மோ. இசரயேல், தமிழ்த்துறை, மதுரைப் பல்கலைக் கழம்	3
3	விலங்குகள் பேசுமா ? திரு. அரங்கன், எம். ஏ. பி. ஓ எல்., மொழியியல்துறை, தில்லிப் பல்கலைக் கழகம்	13
4.	ஈரத்தின் சுவடு திரு இர. குழந்தைவேலு எம். ஏ.,	22
5.	வள்ளுவர் காட்டும் சொல் — அல்லல் வித்துவான். ஆ. பாலன், தமிழாசிரியர், உமாமகேசுவரர் உயர்நிலைப்பள்ளி	29

தமிழ் வாழ்க.

தமிழ்ப் பொழில்

துணர் ௪௫

சௌமிய — ஆண்டு.

1969 - 70

கரந்தைத் தமிழ்ச் சங்கம், தஞ்சை.

ஆசிரியர் :

செ. தனக்கோடி, பி. ஏ.,

உள்ளுறை

செளமிய ஆண்டு	துணர் ௪௫	மலர் ௧ —௧௨

1969--1970 பக்கம்

1 மொழிக்குண்டர் குறிப்புகள் 1, 33, 63,

2 திராவிடமொழிகளின் ஒப்பிலக்கண வரலாறு 3,
திரு. டாக்டர். மோ. இசரயேல், தமிழ்த்துறை
மதுரைப் பல்கலைக்கழகம்.

3 விலங்குகள் பேசுமா ? 13,
திரு. கி. அரங்கன், எம். ஏ., பி. ஓ. எல்.,
மொழியியல்துறை, தில்லிப் பல்கலைக் கழகம்.

4 ஈரத்தின் சுவடு 22. 60. 93. 122. 144.
திரு. இர. குழந்தைவேலு எம். ஏ.,

5 வள்ளுவர் காட்டும் சொல் - அல்லல் 29. 58,
திரு. வித்துவான் ஆ. பாலன், தஞ்சை.

6 செயப்பாட்டு வினை 55. 65. 97. 129.
திரு. S. அகத்தியலிங்கம் எம். ஏ., பி. எச். டி.,
மொழியியல்துறை. அண்ணாமலைப்பல்கலைக் கழகம்

7 பத்திரிகை முதல்வர் திரு. வி. க. 43, 73, 104, 135, 171,
திரு. சாலை இளந்திரையன், எம். ஏ. எம். லிட்.,
டிப்-இன்-யூ-என்-அய்-யூ,
தில்லிப் பல்கலைக் கழகம்.

8 திருக்கோவையார் 82,
திரு. K. சோமசுந்தரம், பிள்ளை, பி. ஏ./ பி. எல்.,

9 பாராட்டுரை 95,

10 முத்தமிழ் வித்தகர் விபுலாநந்த அடிகள் 112.
திரு. அருள்செல்வநாயகம்,
குருமண்வெளி, இலங்கை.

11 பொற்புடைத்தாகப் பொருந்திய முடங்கல் 146,
திரு. K. S. மகாதேவன், எம். ஏ.,

12 தமிழ்நாட்டு ஓவியங்கள் 153, 187, 197,
திரு. J. M. சோமசுந்தரம் பிள்ளை, பி. ஏ., பி. எல்.,

13 குறிப்பு வினை 163,
திரு. டாக்டர் மோ. இசரயேல்,
மதுரைப் பல்கலைக் கழகம்

14 இளங்கோவடிகளின் இலக்கிய அறிவு 181, 226, 229, 268,
திரு. புலவர் பி. விருத்தாசலம், பி. ஏ.,

15 சங்க அகத்துறைப் பாடல்களில் பாத்திரப்பண் போவியம் 206,
திருமதி, சாலினி இளந்திரையன், எம், ஏ, எம். லிட்.,
டிப்-இன்-யூ-என்-அய்-யூ.
திருவேங்கடவன் கல்லூரி, தில்லி

16 மனுநீதிச் சோழன் 214,
திரு. புலவர். E. ஆளவந்தார், பொன்மலை.

17 கவிஞனின் உலகம் 218,
திரு. சொ. சிங்காரவேலன், எம். ஏ. டிப். லிங்.,
மாயூரம்.

18 கையறவு 228,

19 தமிழ் மொழியின் தொல்வரலாறு 236,
திரு, டாக்டர். செ. வை, சண்முகம்,
எம். ஏ., எம். லிட்,
அண்ணாமலைப் பல்கலைக் கழகம்.

20 சங்க இலக்கியங்களில் மிளிரும் விலங்கினப் பண்புகள் 246,
திரு புலவர், துரை. பிச்சை,
அரசு உயர்நிலைப் பள்ளி, சொரகுளத்தூர்,
வடார்க்காடு மாவட்டம்.

21 வெளிவராத கல்வெட்டுகள் 253,
திரு. வித்துவான் தி. அடிகளாசிரியர்.

22 கயமனார் 258, 279,
திரு. சாமி. பிச்சைப் பிள்ளை, எம். ஏ. பி. எசி.,

23 திராவிட மொழிகளின் வழக்கும் குடிமதிப்பும் 261,
திரு. டாக்டர் மோ. இசரயேல்,
மதுரைப் பல்கலைக் கழகம்.

24 மார்கழித் திங்களின் மாண்பு 284,
திரு. புலவர். துரை. பிச்சை.

25 உயிரோவியங்கள் 285, 289,
திரு. வித்துவான். அ. வைத்திலிங்கம்

26 மதிப்புரை 288,

27 சங்கச் செய்திகள் 294,

28 வரலாற்றுக் கண்ணோட்டத்தில் மொழியியல் 295,
திரு. கி. அரங்கன், எம். ஏ., பி. ஓ. எல்.,

29 பழமொழி நயம் 302,
திரு. வ. பெருமாள், எம். ஏ., பி. டி.,
உரிகம், கோலார், தங்கவயல்.

30 குயில்விடு தூது 318,
திரு. சோம. செல்வகுமார்

31 பழங்கனவாய்ப் போனதுவோ? 320,
திரு. புலவர். துரை. பிச்சை

32 முக்கட் பிரானும் நக்கீரனும் 322,
திரு. புலவர். இ ஆளவந்தார்

33 இளங்கோவடிகள் தமிழ்க் கழக வெள்ளி விழா 324,

34 பாரதிதாசனின் ஏற்றப்பாட்டு 327.
திரு. சாலை. இளந்திரையன், எம். ஏ., எம். லிட்.,

35 பொழிலன்பர்கள் சுவைக்க 333, 341 343, 349, 369, 379, 389,

36 தொல்காப்பியத்தில் உயிரிணைகள் 334,
திரு. கா. கோ வேங்கடராமன்

37 வரவேற்பு வாழ்த்துரை 342,

38 நாடிமுன்று 344,
திரு. புலவர், ஆ. பாலன்

39 கள் — வரலாறு 347,
திரு. புலவர். த. சரவணத்தமிழன்

40 இருங்கோவேளும் நற்குடிவேளாளரும் 350, 390,
திரு, பி. இராமநாதன் பி. ஏ., பி. எல்.,

41 இரண்டு தமிழ்ப் பாடல்கள் 359.
திரு. சாலை. இளந்திரையன்

42 முருகனும் பிள்ளைத்தமிழும் 370,
திரு, வித்துவான். பி மா. சோமசுந்தரனார்

43 இளங்கோவின் புலமைச் செல்வம் 380,
திரு. K. சோமசுந்தரம், பி. ஏ., பி. எல்.,

தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு

துணர்	திருவள்ளுவர் யாண்டு ௨௦௦௦ சௌமிய, சித்திரை	மலர்
௪௩	1969—ஏப்ரல்-மே	௧

பொழிற்றொண்டர் குறிப்புக்கள்

புத்தாண்டு

திருவருள் நலத்தால் பிறந்த இப்புத்தாண்டில் தமிழ்ப் பெருமக்கள் யாவருக்கும் பல நலங்களும் பெருக வேண்டு கிறோம். நம் பொழிலன்பர்கட்கும் சங்க அன்பர்கட்கும் எமது உள்ளன்பையும் நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

வேண்டுகோள்

தமிழ்ப் பொழிலின் 43-ஆவது துணர் இவ்வாண்டில் மலரத்தொடங்குகின்றது. சில இடர்ப்பாடுகளால் 1966-இல் பொழில் வெளிவராமல் நின்றது. மீண்டும் 1968-இல் தொடங்கப் பெற்று வெளிவந்து கொண்டிருக்கிறது. இப் போது பொழிலின் உறுப்பினர்கள் மிகக் குறைவாகவே யுள்ளனர். பொழிலுக்கான செலவைத் தாள், அச்சுக்கூலி, அஞ்சல் மட்டுமாகவே கட்டுப்படுத்தியும் எல்லோரும் ஊதியங்கருதாமல் பணியாற்றியும் பொழில் நட்டத்துடன் தான் வெளிவந்து கொண்டிருக்கிறது. இதைக் கேள்வியுற்ற தமிழறிஞர் ஒருவர் திங்கள் தோறும் இருபத்தைந்து வெண் பொற்காசுகள் நன்கொடையாக பொழில் நட்டமின்றி வெளி வரும் வரையில் தருவதாகத் தெரிவித்துள்ளார். அவரின் தமிழ்ப்பற்றும் தொண்டும் நமக்கு மிக்க ஊக்கத்தைத் தந்துள்ளது.

தமிழ்மொழிக்கமைந்த தனிச்சிறப்புக்களிலொன்று அம் மொழியைத் தெய்வமாகக் கருதப்பெற்று வருவது. இவ் வுலகின்கண் வேறு மொழிகளேதும் அவ்வாறு வணங்கப்பட

வில்லை. இத்தகைய பண்புடைய தமிழ் மக்களில் பல அன்பர்கள் தமிழ் மொழியின் மேம்பாட்டிற்கு பணியாற்றுவதில் ஆர்வத்துடனிருக்கின்றனர் என்பதில் ஐயப்பாடில்லை. தமிழ்ப் பொழிலுக்கேற்பட்ட குறையை அன்னாருக்குத் தெரிவித்து அவர்களின் ஆதரவைப் பெற வாய்ப்பை ஏற்படுத்திக் கொள்ளாததே நம்பாற்பட்ட குறையோயென்றும் அஞ்சுகிறோம். இக்குறையை நீக்க இயன்றவரை முயன்று வருகிறோம் நிற்க, பொழில் வளம்பெற நிரந்தரமான வழி பெருவாரியான உறுப்பினர்களைச் சேர்த்தலேயாகும். பொழிலுக்கு உறுப்பினராகச் சேர்ந்தும், பொழில் உறுப்பினராகவுள்ள அன்பர்கள் தங்கள் நண்பர்களில் ஒருவரையேனும் உறுப்பினராகச் சேர்ப்பித்தும் இவ்விதழைப் புரந்தருளுமாறு வேண்டுகிறோம்

இரங்கல்

நமது குடியரசின் தலைவர் டாக்டர் சாகீர் உசேன் அவர்களின் ஒப்புயர்வற்ற பண்புகளையும், அவர்கள் நாட்டுக்குச்செய்த, சிறப்பாகக் கல்வித்துறையிலாற்றிய தொண்டினைப் பாராட்டியும், அவர்கள் மறைந்தது குறித்து ஆழ்ந்த துயரத்தைத் தெரிவித்தும் 8—5—69-இல் நடந்த நிறைவேற்றுக் கழகக் கூட்டத்தில் இரங்கல் தீர்மானம் நிறைவேற்றப் பெற்றது.

நமது நிறைவேற்றுக் கழக உறுப்பினர்களாகப் பணி செய்த நண்பர்கள், திருவாளர்கள் து. நடன சபாபதிபிள்ளை அவர்களும் ச. திருநாவுக்கரசு பிள்ளை அவர்களும் அண்மையில் இயற்கையெய்தினர். இருவர்களும் நம்சங்கத்திற்கு அரிய தொண்டாற்றியவர்கள். திருவாளர் ச. திருநாவுக்கரசு பிள்ளை நீண்ட காலமாகப் பல்லாற்ருனும் அயராது உழைத்து வந்தார். இவர்களின் தொண்டினைப் பாராட்டி, மறைவுக்கு ஆழ்ந்த துயரத்தைத் தெரிவித்து இரங்கல் தீர்மானம் நிறைவேற்றப்பெற்றது.

நிறைவேற்றுக் கழக உறுப்பினர்கள் அமைதியாக நின்று மறைந்த குடியரசின் தலைவருக்கும் நிறைவேற்றுக் கழக உறுப்பினர்களுக்கும் அஞ்சலி செலுத்தினர். பின்னர் கூட்டம் ஒத்திவைக்கப்பெற்றது.

திராவிட மொழிகளின் ஒப்பிலக்கண வரலாறு

டாக்டர் மோ. இசரயேல், தமிழ்த்துறை, மதுரைப் பல்கலைக் கழகம்.

உலகில் ஆயிரக்கணக்கான மொழிகள் வழங்கப் பெறுகின்றன. அவற்றுள் பல இலக்கிய இலக்கண வளம்பெற்றனவாகவும் வேறுபல இலக்கியம் அற்றன வாகவும் உள்ளன. இம்மொழிகளில் பல ஒன்ரோடொன்று தொடர்புடையனவாக அமைந்துள்ளன. அவ்வாருன தொடர்பு அவற்றின் அமைப்பை ஒட்டியோ அல்லது அவற்றின் தோற்றத்தை ஒட்டியோ அமைகின்றது. எனவே உலக மொழிகளை அவற்றின் அமைப்பின் அடிப்படையிலும் பிறப்பின் அடிப்படையிலும் அமைந்துள்ள தொடர்புகளை ஒட்டிப் பல்வேறு குழுக்களாகப் பகுத்தல் இயலும். மேற்சொல்லப்பட்ட பிறப்புத் தொடர்பு அடிப்படையில் திராவிடக்குழு மொழிகள் உலகின் மொழியினங்களில் ஐந்தாவது அல்லது ஆருவது இடத்தைப் பெற்றுள்ளன.

இத்திராவிட மொழிகளின் ஒப்பிலக்கண ஆய்வு பல ஆண்டுகளுக்கு முன்னரே தொடங்கப்பட்டுப் பெரும்பாலும் வெளிநாட்டு அறிஞர்களால் பெரிதும் போற்றப் பட்டு வந்துள்ளது. இற்றை நாளில் இந்திய நாட்டிலும் பல்வேறு அறிஞர் இவ்வொப்பிலக்கண ஆய்வில் ஆர்வம் கொண்டுள்ளனர். பல்லாண்டுகளாக வட மொழியின் கிளைமொழிகளாகவும் பின்னர் இனமொழிகளாகவும், அதற்குப் பிந்திய நிலையில் தென்னிந்தியாவின் ஒரு மொழிக்குடும்பத்தைச் சேர்ந்தனவாகவும் கருதப்பட்ட இம்மொழிகள் இன்று இந்தியாவின் ஒரு தனிமொழிக் குழுவினவாக அறியப்பட்டுள்ளதேயன்றி இந்தியாவின் மொழியினங்களில் இரண்டாவது இடத்தையும் பெற்றுள்ளன.

திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் என்றதும் டாக்டர் கால்டுவெல் அவர்கள் பெயர்தான் யாவர் நினை

விலும் வரும். அவர் இன்றும் திராவிடமொழிகளின் ஒப்பிலக்கணத்தின் தந்தை என்று அழைக்கப்படுகிறார். ஆனால் அறிஞர் கால்டுவெல் காலத்திற்கு முன்னரே திராவிட மொழிகள் பற்றிய ஆர்வம் அறிஞர் பலரிடையே காணப்பட்டது என்றும் அவர்காலத்திற்குப் பின்னர் வேறு பல அறிஞரும் இத்துறையில் குறிப்பிடத் தக்க முன்னேற்றம் கண்டுள்ளனர் என்பதும் இக்கட்டுரையால் அறிதும்

1672 இல் பிலிப் பல்தேயு என்ற டச்சு அறிஞர் முதன் முதலில் தமிழ் இலக்கணம் பற்றித் தமது நூலில் ஒரு பகுதி அமைத்துள்ளார் [1]. அன்னாருக்குப்பின்னர் வேறு பல வெளிநாட்டறிஞரும் தமிழ்மொழியிலும் திராவிடக் குழுவின் பிறமொழிகளிலும் ஈடுபாடு கொண்டு இலக்கண நூற்களையும் அகராதிகளையும் ஆக்கியுள்ளனர். பின்வரும் அறிஞர்கள் குறிக்கப்படும் மொழிகளைப் பற்றிய செய்திகளை வெளியிட்டவர்களாவர். சீகன்பால்கு-தமிழ் (1716), வீரமாமுனிவர்-தமிழ் (1728), பிரிஸ்கிரில்–தமிழ் (1785), இராபர்ட்-மால்டோ (1779), சிமித்-தோடா (1837), லீச்–பிராகுய் (1838), வாய்சே–கோண்டி (1844), புஷ்லர்–படகா (1849), பெர்சிவல்-குயி (1851).

முதன்முதல் திராவிடமொழிகள் தனி இனத்தன என்ற உண்மையை வெளியிட்டவர் அறிஞர் எல்லிஸ் அவர்களே ஆவர் (1816)[2] அவர் காம்பல் எழுதிய தெலுங்கு இலக்கண நூலின் முகவுரையில் தமிழ், தெலுங்கு அல்லது அவற்றின் தொடர்புபட்ட கிளைமொழிகள் எவையும் சமுஸ்கிரதத்தினின்று ஆகியவை அல்ல; சமுஸ்கிரதம் அவற்றின் திருத்தத்திற்குத் துணையாக அமைந்தாலும் அவற்றின் நிலைபேற்றுக்குத்

1 Baldeus, Ph., Naauwkeurie Beschryvirige Van Malabar en Choromandel, Amsterdam, 1672.

2 Ellis, An Indroduction to A. D. Campbells' "A Grammar of the Telugoo Language", 1816.

தேவையானது அன்று; அவை சமுஸ்கிரதத்தோடு அடிப்படையான தொடர்பற்ற ஒரு தனி மொழிக்குடும்பமாக அமைகின்றன; கன்னடம், மலையாளம், துளு, குடகு, இராஜமகால் மலைமக்கள் பேசும் மொழி (மால்டோ) ஆகியவை இவ்வினத்தைச் சேர்ந்தவையாகும்'' என்றும் கூறி உள்ளார். எனவே இம்மொழிகளுக்குத் தனி ஒரு பெயர் சூட்டாவிட்டாலும் தனி ஒரு இனத்தன என்ற செய்தியை முதன்முதல் வெளியிட்ட பெருமை அறிஞர் எல்லிஸ் அவர்களையே சாரும்.

ஏறத்தாழ இருபத்தைந்து ஆண்டுகளுக்குப் பின்னர் ஸ்டீபன்சன் என்பார் தமது கட்டுரை ஒன்றில் தென்னிந்திய மொழியில் வழங்கும் பல பொதுவான சொற்கள் பிராமண மொழியினின்று வடமொழி காட்ட முடியாத நிலையில் உள்ளனவென்று குறிப்பிட்டுள்ளார்[3]. மேலும் தென்னிந்திய மொழிகளினின்று கடன் வாங்கப் பட்ட வடமொழிக்கு இல்லாத பல இயல்புகள் வட இந்திய மொழிகளில் காணப்படுகின்றன என்றும் கூறுகின்றார்.

பின்னர் காட்சன் என்ற அறிஞர் வெளியிட்டுள்ள சொற்பட்டியலிலும் தென், நடு, வடஇந்தியாவில் வழங்கும் பூர்வீகக் குடிகளின் பேச்சுமொழி மாதிரிகளிலும் 'தமிழினம்' என்றே குறிப்பிட்டுள்ளார் [4]. இது இவ்வின மொழி ஆய்வில் முன்னேற்றத்திற்கு வழி வகுத்தது மேச்சுமுல்லர் என்ற அறிஞரும் வடமொழியை அடிப்படையாக அமையாத மொழிகளும் இந்தியாவில் வழங்கு

3 Stevenson, "An Essay on the Languages of the Aboriginal Hindus", The Journal of the Bombay Branch of Royal Asiatic Society, I, 1841-44, P. 103.

4 Hodgson, B. H., Aborigines of the Nilgiris, Journal of the Asiatic Society of Bengal, 25,1856.

கின்றன என்ற உண்மையைத் தெளிவுபடுத்தி உள்ளார்[5].

எனவே கால்டுவெல் ஐயர் அவர்கள் காலத்திற்கு முன்னரே வடமொழித் தொடர்பற்ற இந்தியமொழியினம் ஒன்று தென்னிந்தியாவிலும் வட இந்தியாவின் சில பகுதிகளும் வழங்கப்பட்டது என்றும் அது தன் செல்வாக்கினை ஆரிய மொழிகளிலும் செலுத்தி உள்ளது என்றும் குறிப்புகள் வெளியிடப்பட்டுள்ளன.

எனினும் இவ்வினமொழிகளுக்குத் திராவிடமொழிகள் என்னும் பெயர் சூட்டியதும் இவை வடமொழியினின்று முற்றிலும் வேறுபட்டவை என்று தீர்ப்பு அளித்ததுமான பெருமை அறிஞர் கால்டுவெல் அவர்களுக்கே உரியது. 1856ஆம் ஆண்டு கால்டுவெல் அவர்கள் எழுதிய ஒப்பிலக்கணத்தின் முதற்பதிப்பு வெளிவந்தது. அதன்கண் தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், துளு ஆகிய இலக்கிய வளம்பெற்ற மொழிகளும் தோடா, கோதா, கோண்டி, குவி ஆகிய இலக்கியம்பெறாத பழங்குடி மக்கள் பேசும் மொழிகளும் பெயர் கூறப்பட்டுள்ளன. கொடகர், படகர், குறும்பர் பேசும் கிளைமொழிகளும், பிராகுய், மால்டோ, குருக் மொழிகளும் பற்றிய குறிப்புகளும் அதன்கண் காணப்படுகின்றன. பிராகுய் குருக் மொழிகள் தெளிவான ஒப்பீடுகளின் பின்னரே திராவிடமொழிகள் எனக் கருதத்தகும் என்பது அவர் கருத்து.

பின்னர் அவர் தமது இரண்டாம் பதிப்பில் திருத்தம் பெற்றவை, திருத்தம் பெறாதவை எனப்பகுத்து முதற்குழுவில் குடகு, இரண்டாம் குழுவில் மாலர் அல்லது இராசமகால், ஒராவோன் (குருக்) ஆகியவைகளைச் சேர்த்து பிரிவுக்கு ஆறு வீதம் அமைக்கின்றார். பிராகுய்

5 Coldwell, A Comparative Grammar of the Dravidian or South-Indian Family of Languages. 1856, p. IV.

இன்னும் ஐயப்பாட்டிற்கு உரியதாக அமைவதால் கால்டுவெல் அவர்களால் குறிக்கப்பட்ட திராவிடமொழிகள் பன்னிரண்டேயாகும்.

திராவிடமொழிகள் ஏதேனும் ஒருமொழியின் கிளைமொழிகள் அல்ல; அவை பொதுவான ஒரே அடிப்படைமொழியினின்று தோன்றிய தொடர்புடைய தனிப்பட்டமொழிகள்; அவை சமுஸ்கிரதத்தினின்று தோன்றியவை அல்ல; திராவிடமொழிகள் வட இந்திய அல்லது ஆரியமொழிகளின் வளர்ச்சியில் பெரும்பங்கை வகிக்கின்றன; தமிழ் இவ்வின மொழிகளின் பழமையான இயல்பைக் காட்டுவதில் சிறந்து விளங்குகின்றது; இவை இந்தியமொழியினத்தோடு தொடர்புடையன என்னும் செய்திகளை யெல்லாம் முதன்முதல் வெளியிட்டவர் டாக்டர் கால்டுவெல் ஐயர் அவர்களே ஆவர்.

1906-ல் வெளியிடப்பட்ட இந்திய மொழிகளின் வழக்கு அளவீடு (Linguistic Survey of India) இலக்கியம் பெறாத மொழிகளைப் பற்றிய செய்திகளைச் சிறிது மிகுதியாகத் தருகின்றது[6]. கோலாமி, நாய்க்கி ஆகிய புதிய திராவிட மொழிகளும் பர்காண்டி, கைக்காடி ஆகிய கிளைமொழிகளும் இதன்கண் குறிக்கப்பட்டுள்ளன; பிராகுயும் திராவிடமொழிகளில் ஒன்ருகக் கருதப்பட்டுள்ளது. எனவே 1906-இல் அறியப்பட்ட திராவிடமொழிகளின் எண்ணிக்கை பதினைந்தாக உயர்ந்துவிட்டது. இப்பொழுது ஒரு தனிப்பட்ட திராவிடமொழியாகக் கருதப்படும் பர்ஜி மொழி கோண்டி மொழியின் கிளைமொழியாக இதன் குறிக்கப்பட்டுள்ளது. இந்த அளவீட்டு நூல் திராவிடமொழிகளைத் தமிழ், இடைத்தன்மையன, ஆந்திரம், பிராகுய், கலப்பு என ஐந்து வகைகளாகப் பகுக்கின்றது.

---

6 Grierson and Sten Konow, Linguistic Survey of India, Vol. IV – Munda and Dravidian Languages, 1906.

பின்னர் பிரஞ்சு நாட்டு அறிஞரான யூலி பிளாக் என்பார் திராவிட மொழி சமுஸ்கிரத மொழி ஆகியவை பற்றிய பல ஆராய்ச்சிக் கட்டுரைகள், ஆங்கிலம், பிரஞ்சு மொழிகளில் வெளியிட்டதோடு திராவிட மொழியின் அமைப்பு பற்றிய நூல் ஒன்றினை 1946ஆம் ஆண்டு எழுதி வெளியிட்டுள்ளார்[7]. அந்நூலின்கண் இலக்கிய வளம் பெருத பல திராவிட மொழிகள் பற்றிய செய்திகளும் உள்ளன. தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம், துளு, குடகு, படகா, கோதா, தோடா, கோண்டி, குயி, கோலாமி, குருக், மால்டோ, பிராகுய் ஆகிய மொழிகளின் பெயர்கள் இதன் குறிக்கப்பட்டுள்ளன. திராவிட மொழிகளின் சொல்லமைப்பு, சொற்றொடரமைப்பு ஆகியவை இதன்கண் விளக்கப்பட்டுள்ளன.

இந்திய நாட்டில் திராவிட மொழியியல் துறையில் பணியாற்றியவர்களில் முதன்மையானவர் பேராசியர் எல். வி. இராமசாமி ஐயர் அவர்களே ஆவர். இவர் ஆங்கிலப் பேராசிரியராகப் பணியாற்றிக் கொண்டு, திராவிட மொழிகளால் ஈர்க்கப்பட்டு 1925 முதல் 1950 வரை ஏறத்தாழ நூறு ஆராய்ச்சிக் கட்டுரைகளும் ஒரு சிலநூற்களும் எழுதி வெளியிட்டுள்ளார் இவரது இடையருத தொண்டு இன்றும் போற்றப்படும் அளவிற்குச் சிறந்த இடத்தினைப் பெற்றுள்ளது. இவர் தமிழ், மலையாளம் ஆகிய இருமொழிகளை வேறுபடுத்திக் காட்டியும் ஒப்பிட்டும் துளு, குடகு, குருக், குயி, கோண்டி, பிராகுய் ஆகிய இலக்கியம் பெருத மொழிகள் பற்றி பல ஆராய்ச்சிக் கட்டுரைகள் எழுதியும் உள்ளார். பின்னர் டாக்டர் பி. சுப்பிரமணிய சாத்திரி அவர்கள் திராவிட மொழியியலுக்கு ஆற்றியுள்ள தொண்டு பாராட்டுதற் குரித்தாயுள்ளது.

அடுத்தாற்போன்று இன்றும் வாழ்ந்து அயராது திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணத் துறையில்

---

7 Bloch, J., The Grammatical Structure of Dravidian Languages, (Paris, 1946), Poona, 1954.

பாடுபட்டுத் திராவிட மொழியியற்றுறையில் ஒரு புதுமையையும் திருப்பத்தையும் உண்டாக்கிய பெருமை வெளிநாட்டு அறிஞர்களான தாமசு பரோ, எமனோ என்பவர்களையே சாரும். இவர்கள் அறியப்படாதிருந்த இலக்கியம் பெறாத பல மொழிகளை எடுத்துக் காட்டி அவற்றிற்கு விளக்கம் தந்தும் பழந்திராவிட மொழியின் (Proto-Dravidian) இயல்பினை விளக்கியும் திராவிட மொழிகளிடையே அமைந்துள்ள தொடர்புகளைத் தெளிவாக்கியும் திராவிட மொழியியலில் சிறந்த முன்னேற்றத்தைக் கண்டுள்ளனர்.

பரோ என்னும் பெரியார் திராவிட மொழிகளில் காணும் சில சிறப்பியல்புகளையும் தனித் தன்மையையும் தமது ஆராய்ச்சிக் கட்டுரைகளில் எடுத்துக்காட்டியும், வடமொழியும் திராவிட மொழிகளும் ஒன்றுக்கு ஒன்று கடன்பட்டிருக்கிற இயல்பைப் புலப்படுத்தியும் அறியப் படாதிருந்த பல மத்திய இந்தியாவில் பேசப்படும் திராவிட மொழிகளுக்கு இலக்கணம் எழுதியும் திராவிட மொழிகளின் சொற் பிறப்பகராதி ஒன்று வெளியிட்டும் அரும் பணியாற்றித் திராவிட மொழியியல் அறிவு வளர்ச்சியில் ஈடுபட்டுள்ளார்[8].

எமனோ என்னும் பெரியார் தென்னிந்தியாவில் பேசப்படும் இலக்கியம் பெறாத மொழிகளையும், மத்திய இந்தியாவில் வழங்கும் கோலாமி என்னும் மொழியினையும், பலுசிஸ்தானத்தில் பேசப்படும் பிராகுய் மொழியினையும் ஆய்ந்ததோடு இந்தியாவில் மொழிகளின் வழக்கு பற்றியும் ஆய்வு நடத்தி உள்ளார்[9]. திராவிட மொழிச்

---

8 Burrow T., Collected Papers on Dravidian Linguistics, Annamalai University, 1968.

Burrow T. and Emeneau, M. B., A Dravidian Etymological Dictionary, Oxford. 1961.

9 Emeneau, M. B., Collected papers, The Annamalai University, 1967.

சொற்பிறப்பகராதி இவரும் பரோ அவர்களும் ஆற்றிய அருந்தொண்டின் பிறப்பேயாகும். அண்மையில் இவர் வெளியிட்ட தென் திராவிட மொழிகள் பற்றிய ஆராய்ச்சிக் கட்டுரை பல அறிஞர்களாலும் பாராட்டற் குரித்தாய் அமைந்துள்ளது.

பரோ அவர்களுக்குத் தோன்றும் துணையாக நின்றும் பின்னர் தனிப்பட்ட முறையிலும் திராவிட மொழிகளில் ஆர்வம் கொண்டுள்ள பெரியார் பட்டாச்சாரியா ஆவர். இவர் இந்திய மானிடவியல் துறையில் பணியாற்றுகின்ருர். மத்திய இந்தியாவில் பேசப்படும் கோண்டா, ஒல்லாரி, கோண்டி, நாய்க்கி, குயி, குவி, பர்ஜி ஆகிய இலக்கியம் பெருத மொழிகள் பற்றி செய்திகளை வெளியிட்டுள்ளார். பரோ, பட்டாச் சாரியா என்பவர்களால் 1957ஆம் ஆண்டு பெங்கோ, 1964ஆம் ஆண்டு மண்டா என்னும் புதிய திராவிட மொழிகள் கண்டுபிடிக்கப்பட்டன.

பேராசிரியர் எமனே அவர்கள் வழிநின்று திராவிட மொழிகளில் ஆய்வு நிகழ்த்திய கிருஷ்ணமூர்த்தி அவர்கள் திராவிட மொழியியலுக்குத் தந்துள்ள செய்தி கள் போற்றுதற்குரியன[10] அவரது ஆராய்ச்சி ஏடும் பிற பல ஆராய்ச்சிக் கட்டுரைகளும் புதிய செய்திகளைத் தந்து நிற்கின்றன.

செக் நாட்டுப் பேராசிரியர் கமில் சுவலபில் என்ப வரும் உருசிய நாட்டு ஆராய்ச்சி அறிஞர் ஆன்ட்ரோனு என்பவரும் தமிழ் மொழியின் அமைப்பு இயல்பு பற்றியும் திராவிட மொழிகள் பற்றியும் சிறந்த ஆராய்ச்சிகள் செய்து வருகின்றனர்.

திராவிட மொழியியல் அறிவு வளர்ச்சியில் சிரால், போப், டட்டில், குண்டர்ட், சிற்றல், டென்னிஸ் பிரே,

10 Krishnamurthi, Bh., Telugu Verbal Bases, University of California Press, 1961.

வின்சன் மைல, அர்டன், சிரேடர் போன்ற வெளிநாட்டு அறிஞர்களும் கோதவர்மா, கே வி. சுப்பையா, ஏ. எப். தியாகராசுலு, வேங்கடஇராம ஐயர், இராம கிருஷ்ணயா போன்ற இந்திய நாட்டறிஞர்களும் ஆற்றியுள்ள தொண்டு குறிப்பிடுதற்குரித்தாக அமைகின்றது[11].

ஆல்பிரட் மாஸ்டர். குய்ப்பர், லிஸ்கர், சட்டர்சி, தெ. பொ. மீனாட்சி சுந்தரனார், மு. வரதராசனார், சி ஆர் சங்கரன், சந்திரசேகர் ஆகியோரும் திராவிட மொழியியல் துறையில் ஈடுபாடு கொண்டு அரும்பணி ஆற்றியுள்ளனர்.

இன்று திராவிட மொழிகளின் ஆராய்ச்சி மிகுதியும் வளர்ச்சி பெற்று முன்னேறிச் செல்லுகின்றது. இத் துறையில் இன்னும் ஆய்ந்து அறிதற்குரிய பல செய்திகள் உள. இற்றை ஞான்று இருபதுக்கு மேற்பட்ட திராவிட மொழிகள் அறியப்பட்டுள்ளன. அவை வட,

---

11 இவண் குறிக்கப்படுகின்றவர்கள் பின் குறிக்கப்படும் மொழிகளில் இலக்கணம் எழுதித் திராவிட மொழியியல் அறிவு வளர்ச்சிக்குத் தொண்டாற்றியவராவர்.

பிரோன் மேயர்—மலையாளம் (1913), ஸ்பென்ஸர்—கன்னடம் (1914), நரசிம்மையா கன்னடம் (1914), கோல்—குடகு (1867), பிரிகல்—துளு (1872), சேது மாதவ ராவ் — கோலாமி (1950), கோண்டி (1954), டிரன்சு கோண்டி 1921 , மிச்சல் — கோண்டி (1941), வின்பீல்டு-குயி (1928 , பிரண்ட் பெரைரா-குயி (1909), லிங்கம் லட்சமஜி குயி (1902), பிட்ச கிரால்டு — குவி (1913) சூல்ஸ்—குவி (1911), கிரிக்நர்ட்—குருக் (1924), ஹான்—குருக் 1906) டிரோசே—மால்டோ (1884).

இவ்விலக்கண நூற்கள் அம்மொழிகளைப் பற்றிய செய்திக் களஞ்சியங்களாக அமைந்து இன்றும் பயன் படுகின்றன.

நடு, தென் திராவிட மொழிகள் எனப் பகுக்கப்பட்டு அறிஞர்களால் ஆய்வு செய்யப்படுகின்றன.

அவையாவன :

தென் திராவிட மொழிகள்

தமிழ், மலையாளம், கன்னடம், குடகு, தோடா, கோதா, படகா,

நடுத் திராவிட மொழிகள்

1) தெலுங்கு-துளு

2) கோலாமி-பர்ஜி கோலாமி, நாய்க்கி, பர்ஜி, கடபா (ஒல்லாரி, சலூர்)

3) கோண்டி–குயி கோண்டி, பெங்கோ, மண்டா, கோண்டா, குவி, குயி.

வட திராவிட மொழிகள்

குருக், மால்டோ, பிராகுய்

அண்ணாமலைப் பல்கலைக் கழகம், பரோ பணியாற்றும் ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகம், எமனோ பணியாற்றும் கலிபோர்னியா பல்கலைக் கழகம் ஆகியவை இப்பணியில் பெரிதும் ஈடுபட்டுள்ளன. சிக்காகோ பல்கலைக் கழகமும் அண்மையில் இப்பணியில் ஈடுபட்டு, தனது முயற்சியில் மதுரைப் பல்கலைக் கழகத்தின் ஒத்துழைப்பையும் நாடி உள்ளது. இது இவண் ஒரு புதிய விரைவில் வளர்ச்சி பெறும் முயற்சியாகவே உள்ளது.

விலங்குகள் பேசுமா?

இ. அரங்கன், M. A., B. O. L.,
மொழியியல் துறை, தில்லிப் பல்கலைக் கழகம்.

இலண்டன் மிருகக் காட்சி சாலையிலிருந்த குரங்கு ஒன்று திடீரென்று ஒருநாள் காணமல் போய்விட்டதாம். மிருகக் காட்சி அலுவலர்கள் அதைத் தேடி அலைந்த பொழுது அது ஒரு நூலகத்தில் அமர்ந்திருந்ததாம்! அக்குரங்கு ஒரு கையில் பைபிளையும் மற்ருெரு கையில் டார்வின் என்ற விலங்கியல் அறிஞனின் கூர்தலறக் கொள்கையை [Theory of Evolution] விளக்கும் நூலையும் வைத்துக் கொண்டு படித்ததை அவர்கள் பார்த்தார்களாம்![1]

இது ஒரு கதை; நம்முடைய நாட்டில் உள்ள பஞ்ச தந்திரக் கதைகளைப் போல மேலை நாட்டில் ஊர் பேர் தெரியாத ஒருவன் கட்டிவிட்ட கதை! மனிதன் தனக்கு உரிய குணங்களை, தான் சிறந்தது என்று நினைக்கின்ற பண்புகளைத் தன்னைச் சுற்றியிருக்கும் மற்றவர் களிடத்தில் காணுத பொழுது அவைகளை விலங்கு களிடத்தில் இருப்பது போல் கற்பனை செய்து பார்க்கிருன் சாதாரண குரங்கு அறிவில் சிறந்த அனுமாளுக வருகிறது; வீரம் நிறைந்த வாலியாக இராமாயணத்தில் நடமாடுகிறது! கதைகள் எப்படி இருந்தாலும் விலங்குகள் மொழியைப் பேச முடியாது என்று நாம் எல்லோரும் அறிவோம்[2]. இல்லையென்ருல்

---

1. இக்கதையைப் பேராசிரியர் லீஸ் [Lees, R. B.] என்பவர் கோயர் உணவு விடுதியில் [Gwyer Hall] சொற் பொழிவாற்றும்பொழுது குறிப்பிட்டார்.

2. "The essential difference between man and animal is exhibited most clearly by human language, in particular, by men's ability to form new statements which express new thoughts and which are appropriate to new situations" p. 3. Chomsky, N (1966) Cartesian Linguistics.

மனிதனை விலங்குகளிலிருந்து பிரிக்கின்ற முக்கியமான நாகரீகக் கருவிகளுள் மொழி தலைமை வாய்ந்தது என்று கூறுகிற அறிஞர்களின் கூற்று பொய்யாகிவிடுமே? இக் கட்டுரை இக்கேள்விக்குத்தான் விடையாக அமையப் போகிறது.

எல்லோரும் எழுப்புகின்ற சாதாரணமான வினவை முதலில் கேட்போம், மொழி என்பது என்ன? பதில் மிக மிக எளிமையானது என்பது முதல் எண்ணம். 'எளிமை' என்ற எண்ணமே ஆராய்ச்சியின் வளர்ச்சிக்கு அழிவு. மொழி என்பது ஒருவன் தான் நினைக்கின்ற வற்றை மற்றவனுக்கு உணர்த்தப் பயன்படுத்தும் கருவி. இது நமக்கு மிக மிகப் பழகிப்போன பதில், மொழியைப் பற்றிப் பேசுகின்ற எந்த நூலானாலும் இந்த வரியை எழுதாமல் மேலே செல்வதில்லை. படிக்கின்ற நமக்கும் சரியான பதில் கிடைத்துவிட்ட நிம்மதி! ஆனால் நாம் இதே வினவைத் திருப்பித் திருப்பிக் கேட்போம். காரணம் மேலே கூறிய பதில் நமக்கு மனநிறைவை அளிக்கவில்லை.

மொழி என்பது ஒருவன் தான் நினைக்கின்றவற்றை மற்றவனுக்கு உணர்த்தப் பயன்படுத்தும் கருவிதானா? மொழியின் இப்பண்புதானா மனிதனை விலங்குகளிட மிருந்து பிரிக்கிறது? விலங்குகள் தங்களுக்கிடையே செய்திகளை உணர்த்திக்கொள்ள இது போன்ற கருவி ஒன்று இல்லாமலா இருக்கின்றன? ஒரு குரங்கு தான் உணர்த்த வேண்டியதை மற்றொரு குரங்கிற்கு உணர்த் திக்கொண்டுதான் இருக்கிறது.[3] விலங்கியலார் குரங்கு கள் தங்களுக்கிடையே முப்பத்தேழு விதமான ஒலி வகை களைப் பயன்படுத்துகின்றன என்று குறிப்பிட்டிருக் கிறார்கள். பயத்தைக் காட்ட ஒருவித ஒலியும் மகிழ்ச்சி யைக் காட்ட மற்றொரு வித ஒலியும் இப்படி ஒவ்வொரு

---

3. "The Marvellous Monkeys of Japan" P. 54. Christopher Lucas (1968) Reader's Digest, December.

விதமான உணர்ச்சியை ஒவ்வொரு வகையான ஒலியைக் கொண்டும் தாங்கள் உணர்த்த வேண்டிய செய்திகளை உணர்த்துகின்றன என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். இதைப் போலவே தேனீ தேன் உள்ள இடத்தை தன்னுடைய உடலின் ஆட்டம் மூலம் மற்றைய தேனீக்களுக்குத் தெரிவிக்கிறது என்று விலங்கியலார் ஆராய்ந்துள்ளார்கள். மீன்களும் தங்களுக்கே உரிய ஒலிகள் மூலம் செய்திப் போக்குவரத்தை நடத்துகின்றன என்று அறிஞர்கள் கூறுகிறார்கள். ஆகையால் மேலே கூறிய பதில் சரியான விளக்கம் அளிக்காதது மட்டுமல்ல தவறானதும் கூட!

மொழியின் தன்மையை உணர நாம் குழந்தைகள் எப்படி மொழியைக் கற்கின்றன என்பதைப் பார்ப்பது அவசியம். விலங்குகளும் தங்களுடைய செய்தி அறிவிக்கும் கருவியின் அமைப்பைக் கற்கின்றன; குழந்தையும் மொழியைக் கற்கிறது. நம்முடைய கவனத்தைச் சற்று இங்கே திருப்பினால் மொழியின் இயல்பைப் பற்றிய விளக்கம் கிடைக்கலாம் என்று நான் நம்புகிறேன். குழந்தை ஐந்து வயதிற்குள் மொழியைக் கற்று விடுகிறது. மொழியைக் கற்கின்ற-குறிப்பாகத் தாய் மொழியைக் கற்கின்ற-நிகழ்ச்சி ஐந்து வயதிற்குள் முடிவடைந்து விடுகிறது. ஐந்து வயதிலும் மொழியைக் கற்க குழந்தை எடுக்கின்ற காலம் முப்பது மாதங்கள் தான்! இக் குறுகிய கால எல்லைக்குள் குழந்தை மொழியை நன்றாகக் கற்றுவிடுகிறது. இதை மேலே தொடர்வதற்கு முன்பாக வேறொரு கருத்தையும் நாம் இங்கு தெளிவாக்கிவிட வேண்டும். மொழியைக் கற்பதில் வயதானவர்களைவிட [ADULTS] குழந்தைகள் எளிமையாகவும் விரைவாகவும் கற்றுவிடுகின்றன என்பது எல்லோர்க்கும் ஒப்ப முடிந்த ஒன்று. இதிலிருந்து மேலெழுந்த வாரியாக ஒரு உண்மையைக் குறிப்பிட்டு விட்டு மேலே செல்வோம் உடலமைப்பிற்கும் [BIOLOGICAL STRUCTURE] மொழிக்கும்

ஏதோ ஒருவிதத் தொடர்பு இருக்கிறது என்பதை நாம் முதலில் உணர வேண்டும்.[4]

மொழி கற்கின்ற திறமையை நாம் வயதாக வயதாக இழக்கிறோம். ஆகையால் தான் பருவம் அடைந்த பிறகு மொழிகற்பதை ஒரு பெருஞ்சுமையாக உணர்கிறோம் குழந்தைகளின் உடலமைப்பு — குறிப்பாகச் சொன்னால் மூளையின் அமைப்பு — மொழி கற்கின்ற தன்மைக்குப் பக்குவப்பட்டிருக்கிறது இப்பொழுது 'இளமையில் கல்' என்ற நம் தமிழ்ச் சான்றோர்களின் மூதுரையை நினைத்துப் பார்த்தால் எவ்வளவு பொருத்தம் என்பது விளங்கும்! குழந்தை தன்னைச் சூழ்ந்துள்ள தாயும் தந்தையும் மொழிகின்ற வாக்கியங்களைக் கேட்கிறது. புறநடப்பியலார் [BEHAVIOURISTS] கற்கின்ற நிகழ்ச்சியை மிக எளிமையான ஒன்றாகக் கணக்கிட்டுவிட்டார்கள். அவர்கள் கூற்றுப்படி மொழி கற்கின்ற நிகழ்ச்சி எளிமையானது. நாம் முதலில் ஒரு மொழியில் உள்ள சில வாக்கியங்களைக் கேட்கிறோம்; அவைகளை அப்படியே திருப்பிக்கூறுகிறோம். மொழியின் வாக்கியங்களில் உள்ள ஒரு சில அமைப்புகளை மனதில் கொண்டு அது போன்ற வாக்கியங்களை நாம் படைக்கிறோம். புறநடப்பியலார் கற்கின்ற நிகழ்ச்சியில் [LEARNING PROCESS] முதலிடம் தருவது நினைவிலிருத்தலுக்கும் [MEMORY] திருப்பிக் கூறுகின்ற தன்மைக்கும் தான் [IMITATION]. மொழியைக் குழந்தை இம்முறையில் தான் கற்கிறதா?

மொழியில் எண்ணிலடங்கா [INFINITE] வாக்கியங்கள் இருக்கின்றன. ஒரே வாக்கியத்தை நாம் திருப்பித் திருப்பிக் கூறுவதில்லை. ஒவ்வொரு நேரமும் புதிய புதிய வாக்கியங்களைக் கேட்டுக்கொண்டும் பேசிக்கொண்டும் இருக்கிறோம். மனிதனின் சிந்தனை வளர்ச்சிக்கு மொழிதான் அடித்தளம். ஒருவன் ஒரு மொழியைக்

---

4. "Biological Foundations of Language" Lenneberg, E. H. (1967) John Wiley & Sons. Inc. Newyork.

கற்றுவிட்டான் என்று அவன் சில வாக்கியங்களைத் திருப்பிக் கூறுவதினால் மட்டும் சொல்வதில்லை. புதிய புதிய சூழல்களுக்குத் தக்கவாறு புதிய புதிய வாக்கியங்களை அவன் உருவாக்க வேண்டும்; புதிய சூழலில் புதிய வாக்கியங்களை அவன் கேட்கும் பொழுது புரிந்து கொள்ளவும் வேண்டும்[5]. ஒருவன் ஒரு மொழியைத் தாய்மொழி என்று கூறினால் அவனுக்கு அம்மொழியில் இந்த ஆற்றல் இருக்கிறது என்று பொருள்! ஆகையால் புற நடப்பியலார் கூறுவதைப் போல மொழி கற்கின்ற நிகழ்ச்சி திருப்பிக் கூறுவதிலும் நினைவிருத்தலிலும் அமையவில்லை. விலங்குகள் கற்கின்ற நிகழ்ச்சியை வேண்டுமானால் நாம் இவைகளால் விளக்கலாம். ஆனால் குழந்தை மொழியைக் கற்கும் பொழுது வேறொன்றும் நடைபெறுகிறது. இதைத்தான் மாற்றிலக்கணம் (TRANSFORMATIONAL GRAMMAR) விளக்க முற்படுகிறது. இதற்கு முன்பு சோதனை ஒன்றைக் கூறி அதன் மூலம் இதைத் தெளிவாக்க முயற்சிசெய்வோம்.

கிளி ஒன்றுக்கு முதலில் பத்து தமிழ் வாக்கியங்களைக் கற்றுக்கொடுப்போம். இப் பத்து வாக்கியங்களையும் அது திருப்பிக்கூற ஐந்து நிமிடங்கள் எடுப்பதாக வைத்துக்கொள்வோம். பதினோராவது வாக்கியத்தை ஆங்கிலத்திலிருந்து கூறுவோம். பதினொன்றிலிருந்து இருபது வரை உள்ள வாக்கியங்கள் ஆங்கிலமாக அமையட்டும். இப்பத்து வாக்கியங்களையும் திருப்பிக் கூற அதே ஐந்து நிமிடங்களைத்தான் கிளி எடுக்கிறது. அடுத்த பத்து வாக்கியங்களைத் தெலுங்கிலிருந்து கொடுப்போம். இப்பத்து வாக்கியங்களையும் அதே

5. "............the fundamental property of a language must be its capacity to use its infinitely specifiable mechanisms for an unbounded and unpredictable set of contingencies" p. 20. Chomsky, N. (1966) Cartesian Linguistics.

ஐந்து நிமிடங்களில் கிளி திருப்பிக் கூறுகிறது. மொழி எதுவாக இருந்தாலும் ஒரு வாக்கியத்திற்கு அரை நிமிட நேரம்தான் கிளி எடுக்கிறது.

இப்பொழுது மனிதனை வைத்துக்கொண்டு இதே சோதனையைச் செய்வோம். முதல் வாக்கியத்தைத் தமிழிலிருந்து கூறும்பொழுது ஒன்றரை நிமிடம் எடுக்கிறான்; இரண்டாவது வாக்கியத்திற்கு ஒன்றேகால் நிமிடம் மூன்றாவது வாக்கியத்திற்கு ஒரு நிமிடம் இப்படி ஒவ்வொரு வாக்கியத்திற்கும் அவன் எடுக்கின்ற நேரம் குறைந்துகொண்டே போகிறது. பதினோராவது வாக்கியத்தை இப்பொழுது ஆங்கிலத்திலிருந்து கூறுவோம். அவன் பதினோராவது ஆங்கில வாக்கியத்தைத் திருப்பிக் கூற இரண்டு நிமிடத்திற்கு மேல் எடுக்கிறான் பிறகு ஒவ்வொரு வாக்கியத்திற்கும் அவன் எடுக்கின்ற நேரம் குறைந்து கொண்டே வருகிறது. இருபத்தோராவது வாக்கியம் தெலுங்காக அமைந்தால் திரும்பவும் அவன் அதைத் திருப்பிக் கூற எடுக்கின்ற நேரம் அதிகமாகி விடுகிறது. தெலுங்கு வாக்கியங்களையே தொடர்ந்து கொடுத்தால் அவனுடைய நேரம் குறைய ஆரம்பிக்கும். இச்சோதனையால் இரண்டு செய்திகளாவது தெளிவாகின்றன. கிளி ஒவ்வொரு வாக்கியத்திற்கும் அரை நிமிட நேரத்தைச் சமமாக எடுக்கிறது; ஆனால் மனிதன் முதலில் அதிக நேரமும் பிறகு போகப்போக குறைந்த நேரமும் எடுக்கிறான். கிளியின் நேரம் வேற்று மொழிகளின் வாக்கியங்களால் பாதிக்கப்படுவதில்லை. தமிழாக இருந்தாலும் ஆங்கிலமாக இருந்தாலும் தெலுங்காக இருந்தாலும் கிளி ஒவ்வொரு வாக்கியத்தையும் கூற எடுக்கின்ற நேரம் அரை நிமிடம் தான். ஆனால் மனிதனுக்கு ஒரு மொழியின் வாக்கியங்களை மட்டும் கொடுக்கும்பொழுது நேரம் குறைகிறது வேற்று மொழியின் வாக்கியங்களை இடையில் செருகினால் அவன் அவைகளைக் கூற எடுக்கின்ற நேரம் மிகப் பாதித்து விடுகிறது. ஆகையால் விலங்குகளின் கற்கின்ற தன்மைக்கும்

மனிதன் மொழியைக் கற்கின்ற தன்மைக்கும் பெருத்த வேறுபாடு உண்டு என்பது இப்பொழுது தெளிவாகும் என்று எண்ணுகிறேன்.

குழந்தை மொழியைக் கற்கும்பொழுது தாய் தந்தையரிடமிருந்து கேட்ட வாக்கியங்களை அப்படியே எந்திரம்போல் திருப்பிக் கூறுவதில்லை. மாருக அது ஒவ்வொரு வாக்கியத்தின் இலக்கண அமைப்பையும் தெரிந்துகொள்கிறது. அதை அறியாமலேயே அதனுடைய மூளை மொழியின் வாக்கியங்களுடைய அமைப்பை அறிந்துவிடுகிறது. அதனுல்தான் முதல் வாக்கியத்தைத் திருப்பிக் கூற அதிக நேரம் எடுக்கிறது. நமக்குப் புலப்படாமலேயே நாம் மொழியைக் கற்கும்பொழுது அம்மொழியின் வாக்கிய அமைப்பை அறிந்துகொள்கிரேம். உருவகப்படுத்திக் கூறினுல் இலக்கணம் போன்றதொரு எந்திரம் நம்முள் இருக்கிறது. அதுதான் மொழியில் உள்ள எண்ணிலடங்கா வாக்கியங்களை உருவாக்குகிறது. சுருங்கக் கூறினுல் இந்த ஆற்றலால் தான் [6] கவிஞனும் சிந்தனையாளனும் வளருகிருர்கள். கலையின் காலம் கடந்த வளர்ச்சிக்கும் மன ஆக்க ஆற்றலுக்கும் மொழிதான் வெளியீட்டுக் கருவியாக அமைந்திருக்கிறது. இதே ஆற்றலால்தான் நாமும் அவர்களுடைய கருத்தையும் உணர்வையும் உணர முடிகிறது. மொழி ஒன்ருல்தான் புதிய புதிய செய்திகளைக் கூற முடியும். மொழியின் எண்ணிலடங்கா வாக்கியங்களை மாற்றிலக்கணம் முதலில் தோற்றுவிக்கிறது; பின்பு அவ்

---

6. 'Poetry is unique in that its very medium is unbounded and free; that is, its medium, language, is a system with unbounded innovative potentialities for the formation and expression of ideas. The production of any work of art is preceded by a creative mental act for which the means are provided by language." p. 18. chomsky, N. (1966) cartesian Linguistics'

வாக்கியங்களின் அமைப்பிற்கு விளக்கம் (Structural Description) அளிக்கிறது ஆனல் இலக்கணத்தின் விதிகள் ஓர் எண்ணில் அடங்கியவை. மாற்றிலக்கணம் ஒரு கருவியாக (Device) உருவகிக்கப்படுகிறது. இதனுடைய ஆற்றலைத்தான் நாமும் நம்முள் பெற்றிருக்கிரேம்.

'விலங்குகள் பேசுமா?' என்ற இக்கட்டுரையின் தலைப்பாக அமைந்த விஞவிற்கு இப்பொழுது விடையளிக்க முயற்சிசெய்வோம். இங்கு 'பேசுமா' என்பதைத் திருப்பக் கூறல் என்னும் பொருளில் பயன் படுத்தவில்லை. மனிதன் மொழியைப் பேசுவதுபோல் விலங்குகளும் நம்முடைய மொழியைப் பேச முடியுமா? தெளிவாக்க வேண்டுமாஞல் நாம் இதே விஞவை வேறு முறையில் எழுப்புவோம். மனிதன் எப்படி மொழியில் அமைந்து கிடக்கின்ற எண்ணிலடங்கா வாக்கியங்களைப் பயன்படுத்துகிருனே அதே போன்று விலங்குகளும் எண்ணற்ற வாக்கியங்களை உண்டாக்க முடியுமா? புதிய புதிய சூழலுக்கு ஏற்றவாறு புதிய புதிய வாக்கியங்களை மனிதன் படைக்கவும் புரிந்துகொள்ளவும் செய்கிருனே அதே தன்மையோடு விலங்குகளும் மொழியைப் பேச முடியுமா? விலங்குகள் செய்தியை உணர்த்தப் பயன் படுத்தும் கருவியை நம்முடைய மொழியோடு ஒப்பிட முடியுமா?

மொழியின் முதல் தன்மை அது எண்ணிலடங்கா வாக்கியங்களைத் தன்னகத்தே கொண்டது மொழியில் ஆக்கல் ஆற்றல் (Creative Power) அமைந்து கிடக் கிறது. ஆனல் விலங்குகளின் செய்தி உணர்த்தும் கருவி இத்தன்மையைப் பெற்றிருக்கவில்லை. முன்னுரையில் கூறியதைப்போல் முப்பத்தேழு விதமான செய்திகளைத் தான் குரங்குகள் அவைகளுடைய ஒலிவகைகளால் அறிவிக்க முடியும். அவைகளுடைய ஒலிவகைகள்

(Calls) ஓர் எண்ணில் அடங்கியவை. புதிய ஒன்றை அவைகளால் உணர்த்த முடியாது. இது எல்லா விலங்குகளின் 'மொழிக்கும்' பொருந்தும் விலங்குகளின் செய்தி உணர்த்தும் கருவியைத் திருப்பிக்கூறல் (Imitation) நினைவிருத்தல் (Memory) என்பவற்றால் விளக்கிவிடலாம். ஆனால் மொழியை இவைகளைக் கொண்டு மட்டும் விளக்க இயலாது. மனிதன் பிறக்கும் பொழுதே சில ஆற்றல்களோடு பிறக்கிறான். மொழி கற்கின்ற நிகழ்ச்சியை (Learning Process) விளக்க முற்படுகின்ற மொழியியலும் (Linguistics) உளவியலும் (Psychology) மனிதன் பிறக்கும்பொழுதே தன்னகத்துக் கொண்டுள்ள இந்த ஆக்க ஆற்றலை அடிப்படையாக வைத்து ஆரம்பிக்க வேண்டும்[7]. ஆகையால் மொழி என்பது மனித இனத்திற்கே உரிய ஒரு தனிப்பெரும் சொத்து (Species-Specific Trait). இப்பொழுது இன்னொரு தமிழ் முதுரையையும் நினைவுக்குக்கொண்டு வந்தால் எவ்வளவு பொருத்தம் என்பது தெளிவாகும். ' அரிது அரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது! ' மொழியை இறைவன் அளித்தானோ என்னவோ மொழியைப் பேசுகின்ற ஆற்றலை மனித இனத்திற்கு மட்டும் இறைவன்தான் அளித்தான்!

---

7. "........it becomes clearer that language learning must be guided by a rich system of unlearned, in born constraints" p. 283. Postal P. M. (1968) Epilogue in "English Transformational Grammar" Rosenbaum p. s. and Jacobs.

ஈரத்தின் சுவடு

இர. குழந்தைவேலு, எம். ஏ.

காட்சி : 1

களம் : மருதி வீட்டின் புறக்கடை.

காலம் : காலை

கூற்று: மருதி, மருதியின் அன்னையார், நன்னன்.

நன்னன் : என்ன, மருதி! முல்லைக்கொடியைப் பதியத்திற்கு வளைத்து நடுகிருயா? நின் செங்கை வருந்துமே உனக்குத் துணையாகப் பாத்தியமைக்கட்டுமா?

மருதி : (சிறிது சினந்து) ஓர் இழவும் வேண்டா. வீண் வம்பளக்காதே. எதுவுஞ் சொல்லவேண்டா. வலிய வந்து பேசிய பேதையே நின் விடியாமுகத்தில் விழிததே பழியாய் முடியும். விலகிவிடு.

நன்னன் : பெண்ணணங்கே, நின் சொல் தித்திக்கும் சுவையே சுவை வீறுகொண்ட நின் வேண்டுகோள் உவப்பூட்டியது. அது நின் உள்ளத்தை வெளிப் படுத்த நாணப்படுகிருய் என்பதனை விளக்கிற்று நன்று; நன்று வாழ்க நின் எழில்மேனியின் ஒளி என் ஆண்மையை வயப்படுத்தியது நின் பற்களின் தனி ஒளி என் நெஞ்சை அள்ளியது. கடுத்த முகத்த வளாய்ப் பேசினும் நின் அழகின் உச்சிப்பொலிவு மலர்ந்து களிப்பூட்டுகின்றது. பேசுக; இன்னும் பேசுக. இப்போது என் பேச்சு வேண்டா எனக் கூறிஞய் மகிழ்ச்சி, இனிய வாய்ப்பு வாய்த்த வேளை யில் இன்பங்கனியப் பேச விருப்பம் போலும்! இல்வழங்கு மடமயிலே, அச்செவ்வி அறிந்து பேசுதல் நலம் என்பதனை என் மனம் அறியாதுபோயிற்று: நின் கயல்விழிப்பார்வையை எண்ணி அறிவு கலங்கி னேன்.

மருதி: (கடுமையாக) முழுமகனே, நின் காமக்களை மண்டிய கருத்து அறிவேன். கயமை வெறிபாடக் கற்ற சொல்வலைவேட்டுவனே, நின் நச்சு நாக்கு வளரவேண்டா குட்டிச்சுவர்போல் என் வேலியகத்தில் நில்லாதே விலங்கே. விரைந்து விலகிவிடு, ஊரைக் கூவி அழைப்பேன்.

மருதியின் அன்னையார்: (அவ்வேளையில் வீட்டினுள்ளிருந்து) கண்ணே, மருதி! வீடுவரை வந்துசெல்.

மருதி: அன்னையே! நம் வேலியொழுங்கில் நிற்கும் கொழுத்த எருமையைத் துரத்தி வருவேன்.

மருதியின் அன்னையார்: மகளே, விழிப்பாய் விலகி நின்றே துரத்தித் திரும்பு

மருதி: நல்லது, அன்னையே! (நன்னனை நோக்கி) இங்கு நில்லாதே.

நன்னன்: (சினந்து) மனம் புண்படப் பேசி என்னை முழுமகனாக்கி இழித்துப் பேசுகிறாய் ஒரு சொல் சொல்வேன் உன்னை ஒருநாள் மெய்ந்நடுங்குமாறு அழுத கண்ணளாய்க் காண்பேன். நின் கருங் கூந்தல் என் காலைத்தீண்டும் வாளா இரான் நன்னன் உன்னைப் பணியச் செய்வேன், மறவற்க.

மருதி: (கொதித்து) செய்வாய்; செய்வாய். நீ வாளா யிருந்தாலும் அஞ்சேன். நின் காமவெறி வாயில் வஞ்சினம் தெறித்தது கண்டு பெரிதும் நாணுகிறேன். மன்னன் வழி வந்தவன் என்ற எண்ணம் போலும். நாவடக்கம் வேண்டும் என்று அறிவுறுத்த விரும்பினேன். வீணே பிதற்றாதே. என் கற்பிற்கு மாசு கற்பிக்க முனைந்தால், உயிர் ஈந்தும் பழியைப் பிரிப்பேன். சொல்லத் திருந்துவது மானம் நிறைந்த மனம். உனக்கு மனம் ஏது? மானம் ஏது? அறம் அறியா உனக்கு என் நெஞ்சம் தீண்டும் தகுதி

எவ்வகையிலும் இல்லை; இல்லை. அறிந்தே நெருங்கினும் அறியாது நெருங்கினும் நெருப்புச்சுடும். வாளா இரு. வீணே துள்ளல் வேண்டா.

நன்னன்: (உரத்த குரலில்) என் கருத்தே முற்றுவிப்பேன்! இஃது உறுதியாய் நடக்கும்!

மருதி: (மிகுந்த வெறுப்பொடு) சீ! மானங்கெட்ட சொல். நின் உறுதி ஒழிக, ஆழ்க, கெடுக, இனி நட, திரும்பாதே.

மருதியின் அன்னையார்: மருதி!

மருதி: வந்தேன்; வந்தேன்.

காட்சி: 2

களம் : காவிரியாறும் மணற்பகுதியும்

காலம் : முற்பகல்.

கூற்று: மருதி, வெள்ளிவீதி

வெள்ளிவீதி: மருதி, நின் மழைக்கண் தண்ணீரில் சிவந்துவிடும், இனிக் குளித்தல் வேண்டா. கண் சிவந்துவிடின் கள்ளக் காமக் களியாட்டம் எனக் கொண்டு ஊர் மயங்குதற்கு வாய்ப்பு உண்டு. ஊர்ப் பழி நாக்கில் தனிச் சுவையேறும். ஊரில் வீண் பழியைத் தூற்றிக் கூத்தாடும் வல்லவர் சிலருக்கு வாய்விருந்தாய் முடியும் விரைந்து கரையேறு காலம் தாழ்த்தல் வேண்டா. நம் அன்னையார் தேடி வருதல் கூடும்.

மருதி: (பெருமூச்சு விட்டு) தேடிவருவதற்கு வேறு யார் இருக்கின்றார்?

வெள்ளிவீதி: என்ன ஏக்கமோ? எனக்கு விளங்கவில்லையே!

மருதி: அந்த ஏக்கத்திற்கு மருந்தேது?

வெள்ளிவீதி: ஓ! ஓ! நிலைமை நன்ருக விளங்குகிறது? நாளும் நின் உடல் புகுந்து உயிர்கொன்று வாழும் உயிர்வடிவத்தை, யான் அறியேனே!

மருதி: (வெறுப்பொடு) விடு; விடு.

வெள்ளிவீதி: என்ன, மருதி! நின் காது குடையக் கதறினேனு? இருக்கும்; இருக்கும். நின் மனம் நோதல் கண்டு என் மனம் வாடுகிறது. நின் நெஞ்சம் கொதித்தால், உயிரகத்தே வாழும் அகமுடையாரும் வாடுவரே எனக் கருதிக் கலங்கிய உனக்கு என் வாழ்த்து (சிறிது வியந்து) என்ன, என் முகம் பாராது, நின் பார்வை கவலையற்றுக் காவிரியில் குளிக்கக் காண்கின்றேனே? காவிரி வெள்ளமாய்க் காதல் நெஞ்சில் சுரக்கவே, கூர்த்த அறிவெல்லாம் கொள்ளை கொடுத்து மெய்ம்மறந்து நிற்கின்ருய்!

மருதி: ஆம் நின் முகம் பார்த்து வாய்ச்சொல்லுக்குச் செவி சாயாது நிழலாய் நின்றது குற்றமே. நின் எண்ணவோட்டத்தை மறுக்கவில்லை. மகிழ்ந்து மதிக்கின்றேன்! (உணர்ச்சி வயப்பட்டு) ஆ! ஆ! அதோ பார்த்தாயா?

வெள்ளிவீதி: என்ன, மருதி கூத்தாடுகிருய்? நீ, என் சொல்லுக்குச் செவி சாயாது; காவிரியின் நீர்ப்பரப்பில் கண் சாய்த்த உருக்கத்தின் விளைவு விளங்குகிறது. எதிர்பார்த்த காட்சியா? எதிர்பாராத காட்சியா?

மருதி: அவர் நீரில் மூழ்கி மூழ்கி, நீர்ப்பரப்பில் எழுந்து வாளை மீனுய் நீந்தும் வல்லமையே வல்லமை! பார்த்தாயா? பார்த்தாயா? எத்துணை எத்துணை வகையாகச் சுழன்று சுழன்று ஆடுகிருர்!

வெள்ளிவீதி: ஓ! காதலால் அலையுண்ட நின் அங்கயற் கண் பார்வைக்குப் பரிசுதர விழைந்தவரா அவர்! அவர் வாழ்க. நின் நெஞ்சம் குழைந்து வாயூறிச்

நின் எண்ணம் வெல்ல இயல்வதா? இதனை, யான் எண்ணி எண்ணித் துடிக்கின்றேன்.

மருதி: என்னுள்ளத்தைப் பட்டாங்குச் சொல்வேன். ஏன் மறைத்தல் வேண்டும்? நாளும் இவ்வேளையில் அவரைப் பார்த்துப் பார்த்து யான் உயிர் வாழ்கின்றேன். யான் என் செய்யவல்லேன்?

வெள்ளிவீதி: காதல் கண் எவ்வழி, கன்னி நெஞ்சம் அவ்வழி, நின் காதல் கனிந்த உள்ளத்து உணர்வை, அவர் உய்த்துணர்ந்தால் நல்லது, ஆ! மறந்தேன் தோழி! நம் அன்னை வருவார் புறப்படு

மருதி: நல்லது; நட, நடப்பது நடந்தே தீரவல்லது; நடவாது நில்லாது. (பெருமூச்சொடு) இயற்கை விட்டவழி.

வெள்ளிவீதி: (முறுவல் பூத்து) இதுபோழ்து நடப்பவை நின் கால்கள்! முன்னர்க் காதலுக்காக நடை பயின்றவை நின் கண்கள்! என்னே, மருதி?

மருதி: என் துன்பம் போக்கவே நெஞ்சந் திறந்து பேசுகின்றாய். என் செவிக்கு இன்பமாக இருக்கின்றது. சொல்லுக.

வெள்ளிவீதி: (மருதியின் தோளைப்பற்றி) தோழி, தொலைவில் ஒருவன் நம்மை நோக்கி வருகின்றான்! அவன் நெருங்கி வருவதற்கு முன்னர் விரைவாக நடத்தல் வேண்டும் நடையில் விரைவு கூட்டுக.

மருதி: ஆம்; ஆம் அவன் கொலைக்கண் நன்னனே, (பல்லைக் கடித்து) நாய்மகன்! விரைந்துநட. அவன் கயமை நடையின் அசைவே அது.

வெள்ளிவீதி: (நடுங்கி) ஐயமே இல்லை, அவன் பார்வையில் காமநஞ்சு வடியும். (மருதியின் கையைப்பற்றி) வருக. அவன் கீழ்மனம் அறிவேன். நாம் மனைக்குத் திரும்பியது நல்ல காலம்.

களம். அவர்தம் கண்ணழகில் களித்துக் கற்ற காதலே நின் நெஞ்சில் இனிமை ஊட்டியது. உண்மை, எனினும் அவர், நின் கண்ணில் காதலைக் கற்க முயலா நிலைக்கு இரங்கினேன். எனவே, ஏங்கிப் பலவாறு எடுத்துரைத்தேன் (வருந்துவது போல நடித்து) குற்றமாயின் என் சொற்பொருள் பொறுக்க.

மருதி: (தழுவிக்கொண்டு) நீ வருத்தமுருதே, நின் சொல் அழிவைத் தந்ததுண்டோ? இல்லை. நின் நிறை அன்பின் தாய்மைச் சிறப்பு அறிவேன். தோழி, நீ சொல்லு; வழிகாட்டவல்ல நின் சொல்வழி நிற்பேன். இடித்துரை; வாழ்க்கை நலம்பெறுவேன்.

வெள்ளிவீதி: ஒன்று உரைக்க விருப்பம். அவருக்குத் திருமணம் முடிந்திருந்தால்? (சிறிது நிறுத்தி) எண்ணுக நின் காதல் கண் பட்டபாட்டிற்குக் கூலி ஏது? நின் நெஞ்சு அவலத்தால் கெடும்; உடல்நலங் குன்றும்; எஞ்சுவது ஊர்ப்பழி

மருதி: இராது. ஒருகாலும் இராது, அவருக்குத் திருமணம் நிகழ்ந்திராது. இஃது என் நம்பிக்கை. அங்ஙனம், மணந்தவராயின் என் பார்வையும் மெய்யாக அவர்தம் மெய்யில் படிந்திராது. என் நெஞ்சு மறந்தும் அவரை விழைந்திராது என் நெஞ்சில் அவர் வடிவு நிலைத்தற்கும் வழியில்லை. வேறுசொல்ல அறிகிலேன்.

வெள்ளிவீதி: நம்பிக்கையே பெருஞ்செல்வம். நன்று, ஒன்றும் வினவல்வேண்டா என்னுமளவில், விடாப்பிடியாய் நின்று காதல் தழுவிய நின் உள்ளத்து உரம் வெளிப்பட்டது. நின் எண்ணத்தை என் சொல் எதிர்த்து நிற்கவழியில்லை. பருவம் வாய்ந்த உன்னைத் தடுத்தாட்கொள்ள இயலாதா? நின் பார்வை நாளும் சுற்றிச் சுழன்று பற்றிப் பொருந்திக்கொண்ட காதல் எண்ணத்தால், அப்பெருமகனைக் கொண்டானைக் கொள்ளத்துடிக்கின்றாய். அவர் அரசமகனாராயின்

நின் எண்ணம் வெல்ல இயல்வதா? இதனை, யான் எண்ணி எண்ணித் துடிக்கின்றேன்.

மருதி: என்னுள்ளத்தைப் பட்டாங்குச் சொல்வேன். ஏன் மறைத்தல் வேண்டும்? நாளும் இவ்வேளையில் அவரைப் பார்த்துப் பார்த்து யான் உயிர் வாழ்கின்றேன். யான் என் செய்யவல்லேன்?

வெள்ளிவீதி: காதல் கண் எவ்வழி, கன்னி நெஞ்சம் அவ்வழி. நின் காதல் கனிந்த உள்ளத்து உணர்வை, அவர் உய்த்துணர்ந்தால் நல்லது, ஆ! மறந்தேன் தோழி! நம் அன்னை வருவார் புறப்படு

மருதி: நல்லது; நட, நடப்பது நடந்தே தீரவல்லது; நடவாது நில்லாது. (பெருமூச்சொடு) இயற்கை விட்டவழி.

வெள்ளிவீதி: (முறுவல் பூத்து) இதுபோழ்து நடப்பவை நின் கால்கள்! முன்னர்க் காதலுக்காக நடை பயின்றவை நின் கண்கள்! என்னே, மருதி?

மருதி: என் துன்பம் போக்கவே நெஞ்சந் திறந்து பேசுகின்றாய். என் செவிக்கு இன்பமாக இருக்கின்றது. சொல்லுக.

வெள்ளிவீதி: (மருதியின் தோளைப்பற்றி) தோழி, தொலைவில் ஒருவன் நம்மை நோக்கி வருகின்றான்! அவன் நெருங்கி வருவதற்கு முன்னர் விரைவாக நடத்தல் வேண்டும் நடையில் விரைவு கூட்டுக.

மருதி: ஆம்; ஆம் அவன் கொலைக்கண் நன்னனே, (பல்லைக் கடித்து) நாய்மகன்! விரைந்துநட. அவன் கயமை நடையின் அசைவே அது.

வெள்ளிவீதி: (நடுங்கி) ஐயமே இல்லை, அவன் பார்வையில் காமநஞ்சு வடியும். (மருதியின் கையைப்பற்றி) வருக. அவன் கீழ்மனம் அறிவேன். நாம் மனைக்குத் திரும்பியது நல்ல காலம்.

வள்ளுவர் காட்டும் சொல்— அல்லல்

ஆ. பாலன், *தமிழாசிரியர்*
உமாமகேசுவரர் உயர்நிலைப்பள்ளி,

அல்லல், அல்லல்; எங்கு நோக்கினும் அல்லல், எப்போதும் அல்லல், எஞ்ஞான்றும் அல்லல், எவர்க்கும் அல்லல், நீங்கா அல்லல், தொலையா அல்லல், துன்பந் தரும் அல்லல், தொல்லை கொடுக்கும் அல்லல். இவ் வல்லலை நீக்க அல்லும் பகலும் பாடு பட்டு வரும் மக்கட் கூட்டம் செய்ததென்ன? செய்யப் போவ தென்ன? நிழல் போல் தொடரும் இவ்வல்லலை நீக்க வழி தான் என்ன? வகைதான் யாது? இவ்வுலகெங்கு நோக்கினும் இதற்கு விடை கூறுவார் அரியராகவே உள்ளனர். மறதி எனும் பேய் வாய்ப்பட்டுழலும் மக்கட் கூட்டத் திற்கு, நல்லறிஞர் நவின்ற நல்லுரைகள் நாளடைவில் மறந்து மறைந்தும் போய்விடுகின்றன பன்முறை மீண்டும் மீண்டும் எடுத்தியம்பினும், அவை யாவும் அவர்களின் அஞ்செவியின் எல்லையை யடையும் முன்னரே அல்லல் பேய் அவர்களை ஆட்கொண்டு விடுகிறது. நல்லறிஞர் நவின்ற நல்லுரைகளைக் கற்பதற்கோ? கற்றறிந்தார் சொல்லக் கேட்பதற்கோ? அவர்கட்கு ஓய்வேது? ஒழிவேது? கடலில் கடுங்காற்று வீசும் வேளையில் கலங்கொண்டு கடிதில் செல்ல விழை யும் நிலையிலேயே உள்ளனர். இதனுன் அவர்களின் அல்லல் மேன் மேலும் நீடித்துக்கொண்டே செல்லு கின்றது; குறைவதற்கோ? குறைப்பதற்கோ? வழியில்லை.

இவ்வல்லல் எங்கிருந்து? எதனுல்? ஏன்? உண்டாகிறது. காரணங்கண்டார் சிலர். அவருள்ளும் முதன்மையராய் வந்தார் வள்ளுவர். உலகில் ஏற்படும் அல்லல்களில் பெரும்பான்மை நட்பு என்ற ஒன்றினுல் தான் நேரிடுகின்றது. அந்நட்புத் தீநட்பாய் அமையின் அல்லல் சொல்லாமலேயே வந்து சேரும். அல்லலை அணைக்கும் நட்பினை நாடாது, அல்லலை நீக்கும்

நட்பினையே நாடல் வேண்டும் அதுவே நட்பிற்கு இலக்கணம். அந்நட்பே நனி சிறந்தது. அற்றகுளத்தின் அறு நீர்ப்பறவை போல்' நீங்கிச் செல்லாது, அல்லலுறும் நண்பருடன் உடனிருந்து அவ்வல்லலைத் தானும் மேற்கொண்டு துணிவுடன் அல்லல் நீக்கப் பாடுபடும் இயல்புடையாரே மெய்ந்நட்புடையார். அத்தகையோரை ஆய்ந்தாய்ந்து நட்புச் செய்தல் நன்று என்பார்.

" அழிவி னவைநீக்கி யாறுய்த் தழிவின்கண்
அல்லல் உழப்பதாம் நட்பு" (787) — என்றார்.

இத்தகைய நட்பினர் இல்லாவிடத்துத் தனித் திருத்தலே சிறந்தது ஒரோ வழி, அல்லலுறும் காலை அகன்று விடும் வன்னெஞ்சுடையார் இருப்பின் அவரை எக்காலத்தும் நட்பினராக ஏற்றுக்கொள்ளற்க அவர் போன்றாரால் வரும் அல்லல் பலப்பலவாதலின் அவரின் நட்பினைக் கைவிட்டு விடுக. அங்ஙனம் கைவிடின் வரும் நன்மைகள் மிகப்பலவாம் எனும் உள்ளுறையை அமைத்து.

" உள்ளற்க வுள்ளஞ் சிறுகுவ கொள்ளற்க
அல்லற்கண் ஆற்றறுப்பார் நட்பு" (798)
என்றுரைத்தார்.

இங்ஙனம் அல்லல் நீக்க நன்னட்பினை மேற்கொண்டு ஒழுகல் சிறப்புடைத்து என்ற வள்ளுவர்க்கு, இடையூறாய் வந்து சேர்ந்தது சிற்றினம். அச் சிற்றினமோ நல்லதன் நலனும் தீயதன் தீமையும் இல்லென்னும் இயல்பினையுடையது அறிவைத்திரித்து இருமையையும் கெடுக்கும் தன்மையையுடையது ஏவவும் செய்யாமல் தானும் தேறாமல் உயிர் போமளவும் ஒரு நோயாய் நின்று துன்பந்தரும் செய்கையையுடையது. ஆதலின் சிற்றினஞ் சேராது விலகியும், நல்லார் தொடர் நட்பை விடாதிருந்தும் வாழ்தல் நன்றாம் என்பார்.

" நல்லினத்தி னூங்குந் துணையில்லை தீயினத்தின்
அல்லற் படுப்பதூஉ மில்" (460) –என்றியம்பினர்

இச்சிற்றினஞ் சேராமை நாடு வாழ்வார்க்கின்றியமை யாது வேண்டப்படுவதாயினும் நாடாள்வார்க்கு அதனி னும் பெரிதும் வேண்டப்படுவதாம். சிற்றினஞ் சேர்ந்த புல்லறிவாளர் கூறும் பொய் மொழிகளை மெய்யெனக் கொண்டு செயலாற்ற முனையின்,

" வரிசையறியாக் கல்லென் சுற்றமொடு
பரிவுதப வெடுக்கும் பிண்ட நச்சின்
யானை புக்க புலம் போலத்
தானு முண்ணான் உலகமுங் கெடுமே "

என்ற புறம் காட்டும் கூற்றிற்குச் சான்றாய் மிளிர நேரும் ஆதலின் சிற்றினஞ்சேர்தல் தன் நாட்டிற்கும், தனக்கும் தீமை தருவதாம் இதனால் விளையும் கேடு நாட்டின் மிகப்பெருஞ் செல்வத்தையும் அழித்து, அல்லலை விளைவிக்கும் சிற்றறிவினர் செய்யும் சிறு செயலால் குடிமக்கள் அல்லும் பகலும் தொல்லையுற்றுத் துன்பினைத் தாங்கும் ஆற்றலை இழந்து, அல்லற்பட்டு அழுத அம்மக்களின் கண்ணின் நீர்த்துளிகள் ஒரு நாட்டின் செல்வத்தையும் சிறப்பையும் தேய்த்தழித்து விடும் படைக் கருவிகளாய் அமையும் என்பார்.

" அல்லற்பட் டாற்று தழுதகண் ணீரன்றே
செல்வத்தைத் தேய்க்கும் படை" (555)

எனச் செப்பினர்.

நாடாள்வார், சிற்றினஞ் சேர்ந்து செயல் செய்ய முற்படுதலினால் வரும் அல்லலை வகுத்துரைத்த வள்ளுவர்; சான்றோர்க்கு ஒரு சிறப்பினைத் தந்து செல்லும் முகத்தான், 'அற்றேமென்றல்லற் படுபவோ' என்றார் செல்வம் வந்த காலத்து ஊரெல்லாம் உற்று நோக்கக் கூத்தாடிக் களிப்படைதலும், வறுமையுற்றக்

காலத்து வருந்தி நொந்து, இன்புற்று வாழ்வாரை வைதலும் செய்யும் சிற்றினம் போலாது, செல்வம் வந்துற்றக் காலத்தும், நல்கூர்ந்து வாடிய காலத்தும் தாம் செய்யவேண்டும் செயல்களையே சிந்தித்திருக்கும் திறனுடையாரிடத்து அல்லல் வந்து அண்டுவதில்லை. அத்தகையோரைக் கண்டு அல்லலும் அஞ்சும் என்பார்.

" அற்றேமென் றல்லற் படுபவோ பெற்றேமென்
றோம்புதல் தேற்று தவர் " (௬௨௬) என மொழிந்தார்

வறுமை வந்தடைந்த காலத்தும் வாய் திறவாமல் கடனறிந்து செயலாற்ற சான்றோர் முற்படுவர். சிற்றினமோவெனில் வந்து சேரும் செல்வத்தையும் வறுமை வரும் வழிதனில் போக்கிவிட்டு வையத்தில் வாழ்வாரை வைது செல்வர். தன்னிடமுள்ள பொருளை யழித்து அறிவையும் அன்பையும் கெடுத்து, அல்லலை விளைவித்து, உண்ண உணவும் உடுக்க உடையுமின்றிச் செய்துவிடும் சூதினை மேற்கொள்ளின்; சிறுமை பல செய்து சீரழிக்கும். பழகிய செல்வமும் பண்பும் கெடுக்கும் அரசர்க்கரசரும் அடிசறுக்கி வீழ்வர். இதனால் சூதினை மேற்கொள்ளின் பொருள் போவதல்லாமல் பொய்யினை வலிந்து கூறலும், உணவின்றி வயிறு காய்தலும் போன்ற அல்லல்கள் ஏற்படும் என்பார்.

"பொருள் கெடுத்துப் பொய்மேற் கொளீஇ யருள்கெடுத்
தல்லல் உழப்பிக்குஞ் சூது" (௯௩௮) எனவும்,

"அகடாரார் அல்லல் உழப்பர்சூ தென்னும்
முகடியான் மூடப்பட் டார்"(௯௩௬)எனவும் உரைத்தார்.

ஒன்றெய்தி நூறு இழந்து அல்லல்படும் சூதினை வெறுத்து நன்றெய்தி வாழும் வகையை அறிவுறுத்தினர்.

(தொடரும்)